**றுவன்வெல்ல பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

----------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 16 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து றுவன்வெல்ல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டிற்குரிய கடை வாடகை ரூபா 11,000 இனை பதிவழித்தல் மீளாய்வாண்டின் செலவினத் தலைப்பின் வரவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 11,000 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்வரும் வருடங்களுக்காகக் கிடைத்த ரூபா 67,095 தொகையான ஆதனவரி வருமானம் பெறவேண்டிய ஆதனவரி வருமானத்தில் ஈடுசெய்யப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னரே பெறப்பட்ட வருமானம் மற்றும்

நிலுவை வருமானம் ரூபா 67,095 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையிலிருந்தும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்தும் நன்கொடையாகக் கிடைக்கப்பொற்ற ரூபா 13,653,200 பெறுமதியான 09 வாகனங்கள் மூலதனமாக்கப்படாமையினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களினதும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கினதும் மீதிகள் ரூபா 13,653,200 வீதம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் காணியும் கட்டிடமுமாக ரூபா 27,005,095 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான பட்டோலைகள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 08 ஏக்கர் 10 பேர்ச் அளவான 13 காணிக்கூறுகள் சரியாக பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிராததுடன், மேலும் 50 காணிக்கூறுகளுக்கு எந்தப் பெறுமதியும் கணககுகளின் ஊடாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக மூன்று தொடர்பாடல் கம்பனிகளிலிருந்து 2008 முதல் 2013 ஆம் ஆண்டு வரை 05 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்ட ரூபா 507,600 தொகை மற்றும் காணி கூறிடல்களுக்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது அறவிடப்பட ரூபா 350.000 தொகை என்பன வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திண்ட நிதியக் கணக்கு ரூபா 857,600 குறைத்தும் பொது வைப்புக்களின் பெறுமதி அப் பெறுமானத்தால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2006 ஆம் ஆண்டு முதல் 06 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 18,500 தொகையான ஊழியர் பிணைப் பணம், பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,500 தொகை பொது வைப்பில் அதிகரித்தும், ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் பிணை வைப்பு முதலீடுகளின் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,290,928 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,345,354 ஆனமையால் வேறுபாடு ரூபா 18,054,426 ஆகும்.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,981 தொகையான தொங்கல் கணக்கில் செலவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,810,709 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,834,315 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,955,234 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 4,628,076 ஆகும்.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத:தவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | செயல்நிமித்த உப கூட்டுநிதியாக வழங்கப்பட்ட பணம் உரிய பணிகள் நிறைவுபெற்றதும் உடனபடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த |

| | | |
|---|---|---|
| | | போதிலும், ரூபா 625,653 முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்களில் உரிமை கோரப்படாத ரூபா 195,289 தொகையான வைப்புக்கள் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் தாான விதிக்கோவை<br>----------------------------------------------- | |
| (i) | XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | 08 உத்தியோகத்தர்களிடமிருந்து 2002 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 441,744 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 11 ஆவது தொகுதியில் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவு | வாடகையாகக் கிடைத்த ரூபா 485,399 தொகை சபைக்குக் கையளிக்காது தனிப்பட்ட பாவனைக்குட்படுத்திய வருமானக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தரொருவர் ஊழல் மோசடியைப் பெற்று வேலை நீக்கத்திற்குள்ளாகி 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவல |

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### 2.1 நிதி விளைவு

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,567,191 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,247,946 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 3,815,137 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

---------------------------------

### 2.2.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

---------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதனவரியும் வரியும் | 2,137,269 | 423,282 | 3,029,086 | 1,991,542 | 1,713,987 | 1,037,544 | 2,751,531 |
| ii. | வாடகை | 2,045,891 | 768,224 | 6,291,138 | 5,549,830 | 1,277,667 | 741,308 | 2,018,975 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 80,398, | - | 163,500 | 163,500 | 80,398 | - | 80,398 |
| iv | ஏனைய வருமானம் | 14,730,112 | 11,967,849 | 42,165,513 | 21,967,971 | 2,762,263 | 20,197,542 | 22,959,805 |

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் கைத்தொழில்களை நடாத்திச் செல்வதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 21 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமையின் அடிப்படையில் சபைக்கு ரூபா 88,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களின் அடிப்படையில் வருடாந்தம் அனுமதிப்பத்திரக் கட்டணம்

அறவிடப்படாமையின் காரணமாக சபைக்கு ரூபா 36,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 19 மர ஆலை மற்றும் தச்சு வேலைகளுக்கான வியாபார அனுமதிப்பத்திரம்/ வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2014 ஆம் ஆண்டின் போது மாத்திரம் பிரதேச சபை நிதியத்திற்கு ரூபா 19,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக 04 சந்தர்ப்பங்களின் போது கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள 06 ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தாதிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 34,509 பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) தலைவரால் 2013 செப்தெம்பர் 19 முதல் 2013 ஒக்தோபர் 22 வரை வாடகை செலுத்தும் அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்காக ரூபா 93,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பிரதம அமைச்சரினால் ரூபா 73,334 செலவினமொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அங்கீகாரம் கிடைக்கப்பெறாத செலவினம் ரூபா 20,161 ஆகும்.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற வறாவல புதிய பாலத்தின் 2013 ஆம் ஆண்டின் மின்சாரப் பட்டியலாக ரூபா 48,227 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**------------------------------------**

உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 842,707 தொகையான சபையின் 06 வேலைகளுக்காக 2014 திசெம்பர் மாதம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தும் 2015 யூலை 10 கணக்காய்வுத் திகதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**-------------------------------------------------------------------**

**4.1 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

**-------------------------------------------------------------------------------**

2015 யூலை 23 ஆந் திகதி வரையில் 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 3,548,989 ஆகும்.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

**-----------------------------------------------------------**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்